குழந்தைகளுக்கான நீதி நூல் வரிசை

தமிழ் மூதாட்டி ஔவையார்

இயற்றிய

மூதுரை என்னும்

வாக்குண்டாம்

மூலமும் புதிய தெளிவான உரையும்



வெளியீடு :

கு. வி. அச்சகம்

386 மணிக்கூட்டு வீதி,

யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் மூதாட்டி ஔவையார்

இயற்றிய

மூதுரை என்னும்

வாக்குண்டாம்

மூலமும் புதிய தெளிவான உரையும்

சிறுவர்கள் சிறந்த நீதிநெறிகளைப்
பழைய மரபு முறையில் இலகுவாகக் கற்றுணர்ந்துகொள்ள
உதவும் அரிய நீதி நூல்.

உரிமை பதிவு] [விலை: 3-00

வெளியீடு :

கு. வி. அச்சகம்

386, மணிக்கூட்டு வீதி,

யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஔவையார் இயற்றிய

மூதுரை என்னும்

வாக்குண்டாம்

மூலமும் உரையும்

கடவுள் வாழ்த்து

வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலராள்
நோக்குண்டாம் மேனி நுடங்காது — பூக்கொண்டு
துப்பார் திருமேனித் தும்பிக்கை யான்பாதம்
தப்பாமற் சார்வார் தமக்கு.

பதவுரை : துப்பு ஆர் – பவளம் போன்ற (சிவந்த), திருமேனி - திருமேனியையும், தும்பிக்கையான் - துதிக்கையையும் உடைய விநாயகக் கடவுளின், பாதம் – திருவடிகளை, பூக்கொண்டு - மலர் கொண்டு, தப்பாமல் – (நாள்தோறும்) தவறாமல், சார்வார் தமக்கு – அடைந்து அருச்சிப்போருக்கு, வாக்கு உண்டாம் – சொல் வன்மையுண்டாகும், நல்ல மனம் உண்டாம் - தூய உள்ளம் உண்டாகும்; மாமலராள் - சிறந்த தாமரையில் வீற்றிருக்கும் இலக்குமியின், நோக்கு உண்டாம் - பார்வை உண்டாகும்; மேனி - அவர் உடம்பு, நுடங்காது - வாடாது.

கருத்துரை : விநாயகக் கடவுளின் திருவடிகளை வணங்குவோர்க்குக் கல்வியும், செல்வமும், உடல் நலமும் உண்டாகும்.

நூல்

பயன் கருதாமல் பிறருக்கு உதவி செய்

1. நன்றி ஒருவற்குச் செய்தக்கா லந்நன்றி
என்று தருங்கொ லெனவேண்டா — நின்று
தளரா வளர்தெங்கு தாளுண்ட நீரைத்
தலையாலே தான்தருத லால்.

பதவுரை : நின்று - நிலைத்து, தளரா - சோர்ந்து விடாமல், வளர் - வளர்கின்ற, தெங்கு - தென்னை மரமானது, தாள் உண்ட - தனது அடியினால் குடித்த, நீரை - தண்ணீரை, தலையாலே - தனது முடியினால், தருதலால் – (மிக்க சுவையுள்ள இளநீராக்கிக்) கொடுத்தலால், ஒருவற்கு - ஒருவனுக்கு, நன்றி செய்தக்கால் - உபகாரத்தை செய்தால், அந்நன்றி - அவ்வுபகாரத்தை, என்று தருங்கொல் – அவன் எப்போது திருப்பிக் கொடுப்பான், என வேண்டா - என்று நீ நினைக்க வேண்டியதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்துரை : நல்லோருக்குச் செய்த உதவி சிறந்த வகையில் பயன்படும். ஆகையால் அவ்வுதவியின் பயனை நீ எண்ணுதே.

தென்னை மரம் அடியினுல் உண்டது தண்ணீர், அது முடியினுல் கொடுப்பது, மதுரம் பொருந்திய இளநீர். தான் — அசை நிலை.

நல்லோருக்குச் செய்த உபகாரம் அழியாது

2. நல்லா ரொருவர்க்குச் செய்த உபகாரம்
கல்மே லெழுத்துப்போல் காணுமே — அல்லாத
ஈரமிலா நெஞ்சத்தார்க் கீந்த உபகாரம்
நீர்மே லெழுத்திற்கு நேர்.

பதவுரை : நல்லார் ஒருவர்க்கு - நல்லவர் ஒருவருக்கு, செய்த உபகாரம் - செய்த உதவியானது, கல் மேல் எழுத்துப் போல் - கருங்கல்லின் மேல் செதுக்கப்பட்ட எழுத்தைப் போல, காணும் - என்றும் அழியாமல் விளங்கும்; அல்லாத - நல்லவர் அல்லாத, ஈரமிலா - அன்பில்லாத, நெஞ்சத்தார்க்கு - மனமுடையவருக்கு, ஈந்த உபகாரம் - செய்த உதவியானது, நீர் மேல் எழுத்திற்கு - நீரின் மேல் எழுதப்பட்ட எழுத்திற்கு, நேர் - சமானமாகும்.

கருத்துரை : நல்லவர்க்குச் செய்த உபகாரம் எக்காலத்திலும் அழியாமல் விளங்கும்; தீயவர்க்கு செய்த உபகாரம் அப்பொழுதே அழிந்துவிடும்.

இளமையில் வறுமையும் முதுமையில் செல்வமும்

3. இன்ஞ இளமை வறுமைவந் தெய்தியக்கால்
இன்ஞ அளவில் இனியவும் — இன்ஞத
நாளில்லா நாட்பூத்த நன்மலரும் போலுமே
ஆளில்லா மங்கைக் கழகு.

பதவுரை : இளமை - இளமைப்பருவத்தில், வறுமை - தரித்திரமானது, வந்து எய்தியக்கால் - வந்தடைந்தால், இன்ஞ - அது துன்பத்தைத் தருவதாகும்; இன்ஞ அளவில் - முதுமைப் பருவத்தில், இனிய உம்-இனியனவாகிய பொருள்களும், இன்ஞத - துன்பத்தைத் தருவனவாம்; (அவை) நாள் இல்லா நாள் - (சூடுதற்குரிய) காலமல்லாத காலத்தில், பூத்த நல்மலரும்- மலர்ந்த நல்ல மலரையும், ஆள் இல்லா மங்கைக்கு - கணவனில்லாத பெண்ணுக்கு, அழகு- அழகையும், போலும் - ஒக்கும்.

ஏ - அசை; அழகும் என்பதில் உள்ள உம்மை தொக்கது.

கருத்துரை : இளமையில் வந்த வறுமையும் முதுமையில் வந்த செல்வமும் மிக்க துன்பத்தை விளைவிப்பனவாகும்.

மேன் மக்கள் தன்மை

4. அட்டாலும் பால் சுவையிற் குன்ரு தளவளாய்
நட்டாலும் நண்பல்லார் - நண்பல்லர்
கெட்டாலும் மேன் மக்கள் மேன்மக்க ளேசங்கு
சுட்டாலும் வெண்மை தரும்.

பதவுரை : பால் - பாலை, அட்டாலும் - காய்ச்சினுலும், சுவையில் குன்ருது - அது இனிய சுவையில் குறைவுபடாது, சங்கு - சங்கை, சுட்டாலும் - கொளுத்தினுலும், வெண்மை தரும் - வெண்ணிறத்தையே கொடுக்கும், (அவை போல) மேன் மக்கள் மேன்மக்களே -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலோர்கள் மேலோராகவே விளங்குவர்; நண்பு அல்லார் - சிநேக குணமில்லாத கீழோர், அளவளாய் நட்டாலும் - நெருங்கிப் பழகினாலும், நண்பு அல்லர் - நண்பர் ஆகார்.

கருத்துரை : மேலோர், வறுமையிலும் மேன்மை யுடையவராகவே விளங்குவர்; கீழ்மையை யுடையவர் எவ்வளவு பழகினாலும், நண்பராகார்.

எக் காரியமும் முடியும் காலத்தில்தான் நடக்கும்

5. அடுத்து முயன்றாலும் ஆகுநாளன்றி
எடுத்த கருமங்கள் ஆகா - தொடுத்த
உருவத்தால் நீண்ட உயர்மரங்க ளெல்லாம்
பருவத்தா லன்றிப் பழா.

பதவுரை : தொடுத்த - கிளைத்த, உருவத்தால் - வடிவத்தால், நீண்ட - நீண்டுள்ள, உயர்மரங்க ளெல்லாம் - உயருகின்ற மரங்கள் யாவும், பருவத்தால் அன்றி - பழுக்குங் காலத்தி லல்லாமல், பழா - பழுக்காவாம் (அது போல) அடுத்து முயன்றாலும் - தொடர்ந்து முயற்சி செய்தாலும், ஆகும் நாளன்றி - முடியுங்காலம் வந்தாலல்லாமல், எடுத்த கருமங்கள் - மேற் கொண்ட காரியங்கள், ஆகா - முடியாவாம்.

கருத்துரை : தொடர்ந்து முயற்சி செய்தாலும் ஒரு காரியம் முடிகிற காலத்தில் தான் முடிவடையும்.

உயிரைக் காட்டிலும் மானம் பெரிது

6. உற்ற இடத்தில் உயிர் வழங்கும் தன்மையோர்
பற்றலரைக் கண்டாற் பணிவரோ - கற்றூண்
பிளந்திறுவ தல்லால் பெரும்பாரம் தாங்கின்
தளர்ந்து வளையுமோ தான்.

பதவுரை : கல் தூண் - கருங்கல்லால் செய்யப்பட்ட தூண், பெரும்பாரம் - பெரிய பாரத்தை, தாங்கின் - தாங்கினால், பிளந்து இறுவது அல்லால் - பிளந்து முறிந்திடுவ தல்லாமல், தளர்ந்து - தளர்வுற்று, வளையுமோ - வளைந்திடுமோ; (அதுபோல), உற்ற இடத்தில் - மானக்கேடு உண்டான இடத்தில், உயிர்வழங்கும் தன்மையோர் - தமது உயிரை விடும் குண முடையோர், பற்றலரை - பகைவரை, கண்டால் - பார்த்தால், பணிவரோ - வணங்குவாரோ? (வணங்கார்)

ஓ இரண்டும் எதிர் மறை. தான் - அசை.

கருத்துரை : மானமுடையவர் தமக்கு ஒரு ஆபத்து வந்தபோது உயிரை விட்டாலும் விடுவரே அல்லாமல் தமது மானத்தை விடமாட்டார்.

அறிவு, செல்வம், குணம் அமையும் தன்மை

7. நீரளவே ஆகுமாம் நீராம்பல் தான்கற்ற
நூலளவே யாகுமாம் நுண்ணறிவு - மேலைத்
தவத்தளவே யாகுமாம் தான்பெற்ற செல்வம்
குலத்தளவே யாகுங் குணம்.

பதவுரை : நீர் ஆம்பல் - நீரிலுள்ள ஆம்பல் மலரானது, நீர் அளவே ஆகும் - நீரின் உயரத்தின் அளவாகவே யிருக்கும். (அதுபோல) நுண் அறிவு - கூரிய அறிவானது, தான் கற்ற - ஒருவன் படித்த, நூல் அளவே ஆகும் - நூல்களின் அளவாகவே அமையும்; தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்ற செல்வம் - ஒருவன் அடைந்த செல்வமானது, மேலை - முற்பிறப்பில் செய்த, தவத்தளவே யாகும் - தவத்தின் அளவாகவே அமையும், குணம் - ஒருவனுடைய குணம், குலத்தளவே - அவனுடைய குடியின் அளவாகவே, ஆகும் - அமையும்.

கருத்துரை : ஒருவனுக்கு அறிவு அவன் கற்ற நூலின் அளவாகவும், செல்வம், அவன் செய்த தவத்தின் அளவாகவும், குணம் அவன் பிறந்த குடியின் அளவாகவும் அமையும் என்பது கருத்து.

நல்லார் இணக்கத்தின் நலம்

8. நல்லாரைக் காண்பதுவும் நன்றே நலமிக்க
நல்லார்சொல் கேட்பதுவும் நன்றே — நல்லார்
குணங்க ளுரைப்பதுவும் நன்றே அவரோ
டிணங்கி யிருப்பதுவும் நன்று.

பதவுரை : நல்லாரை — நற்குணமுடையவரை, காண்பதுவும் - பார்ப்பதுவும், நன்றே — நல்லதே, நல்லார் - நல்லவருடைய, நலமிக்க - நன்மை மிகுந்த, சொல் - சொல்லை, கேட்பதுவும் - கேட்டலும், நன்றே - நல்லதே யாகும், நல்லார் - நல்லவருடைய, குணங்கள் குணங்களை, உரைப்பதுவும் - பேசுதலும், நன்றே — நல்லதே, அவரோடு — அந் நல்லவருடன், இணங்கி இருப்பதுவும் - கூடியிருப்பதுவும், நன்று - நல்லதேயாகும்.

கருத்துரை : நல்லவரைக் காண்பதும், அவர் சொல்லைக் கேட்பதும், அவர் குணங்களைப் பேசுவதும், அவரோடு கூடி யிருப்பதும் ஒருவருக்கு நன்மையைத் தரும்.

தீயார் இணக்கம்

9. தீயாரைக் காண்பதுவுந் தீதே திருவற்ற
தீயார்சொற் கேட்பதுவுந் தீதே — தீயார்
குணங்க ளுரைப்பதுவும் தீதே அவரோ
டிணங்கி யிருப்பதுவுந் தீது.

பதவுரை : தீயாரை - தீயவரை, காண்பதுவும் - பார்ப்பதுவும், தீதே - தீயதே, திருஅற்ற - மேன்மை யில்லாத, தீயார் சொல் — தீயவருடைய சொற்களை, கேட்பதுவும் - கேட்டலும், தீதே, தீயதே - தீயார், குணங்கள் — தீயவருடைய குணங்களை, உரைப்பதுவும் — பேசுதலும், தீதே - தீயதே, அவரோடு - அத் தீயவருடன்: இணங்கி இருப்பதுவும் - சேர்ந்திருப்பதும், தீது — தீயதே யாகும்

கருத்துரை : தீயவரைக் காண்பதும் அவர் சொல் கேட்பதும் அவர்குணங்கள் உரைப்பதும், அவரோடு கூடியிருப்பதும் ஒருவருக்குத் தீமையைத் தருவதாகும்.

நல்லார் ஒருவரால் எல்லாருக்கும் நன்மை

10. நெல்லுக் கிறைத்தநீர் வாய்க்கால் வழியோடிப்
புல்லுக்கும் ஆங்கே பொசியுமாம் — தொல்லுலகில்
நல்லா ரொருவ ருளரேல் அவர்பொருட்
டெல்லார்க்கும் பெய்யு மழை.

பதவுரை : நெல்லுக்கு - நெற் பயிருக்கு, இறைத்த நீர் - இறைக்கப்பட்ட நீர், வாய்க்கால் வழி ஓடி - கால்வாய் வழியாகச் சென்று, ஆங்கு - அவ்விடத்திலுள்ள, புல்லுக்கும் — புற்களுக்கும், பொசியும் - கசிந்தூறும், (அது போல்) தொல் உலகில் - பழமையாகிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வுலகில், நல்லார் - நல்லவர், ஒருவர் உளரேல் - ஒருவர் இருப்பாராயின், அவர் பொருட்டு - அவர் நிமித்தமாக, எல்லாருக்கும் - யாவருக்கும் மழை, பெய்யும் - மழையானது பெய்யும்.

ஏ, ஆம் இரண்டு அசைகள்.

கருத்துரை : உலகில் நல்லவர் ஒருவர் காரணமாக எல்லோரும் பயனடைவர்.

துணையின் பெருமை

11. பண்டு முளைப்பது அரிசியே யானாலும்
விண்டுமி போனால் முளையாதாம் — கொண்டபேர்
ஆற்ற லுடையார்க்கும் ஆகா தளவின்றி
ஏற்ற கருமம் செயல்.

பதவுரை : பண்டு முளைப்பது — (உமி நீங்குவதற்கு) முன்பு முளைப்பது, அரிசியே யானாலும் - அரிசியே யாயினும், உமி விண்டு போனால் - உமி நீங்கிப் போனால், முளையாது (அவ்வரிசி) முளைக்காது: (அதுபோல) கொண்ட - பெற்ற, ஆற்றல் - பெரிய வல்லமையை, உடையார்க்கும் - உடையவர்களுக்கும், அளவு இன்றி - துணையில்லாமல், ஏற்ற கருமம் - மேற்கொண்ட காரியத்தை, செயல் ஆகாது - செய்து முடித்தல் முடியாது:

அளவு - துணை.

கருத்துரை : பெரிய வல்லமையுடைவர்களுக்கும் தாம் மேற் கொண்ட காரியத்தை ஒரு துணை இல்லாமல் செய்து முடித்தல் அரிதாகும்.

உருவு கண்டு மதித்தல் ஆகாது

12. மடல்பெரிது தாழை மகிழினிது கந்தம்
உடல்சிறிய ரென்றிருக்க வேண்டா - கடல்பெரிது
மண்ணீரு மாகா ததனருகே சிற்றூறல்
உண்ணீரு மாகி விடும்.

பதவுரை : தாழை மடல் பெரிது - தாழம் பூவின் இதழ் பெரியதாயிருக்கின்றது, மகிழ் கந்தம் இனிது-மகிழம்பூ (இதழால் சிறியதாயினும்) மணத்தினால் (அத் தாழம்பூவினும்) இனிதா யிருக்கின்றது, கடல் பெரிது - சமுத்திரம் பெரிதாயிருக்கின்றது, மண் நீரும் ஆகாது- (ஆயினும் அதிலுள்ள நீர் உடம்பின் அழுக்கைக்) கழுவுதற்குரிய நீருமாகாது, அதன் அருகே- அதன் பக்கத்தில், (சுரக்கும்) சிற்றூறல் - சிறிய ஊற்று நீர், உண் நீரும் - குடிக்கத் தக்க நீரும், ஆகிவிடும் – ஆகும். (ஆதலால்) உடல் சிறியர் - உருவத்தால் சிறியவர், என்றிருக்க வேண்டா – என்று மதியாதிருக்க வேண்டா.

மண்ணுதல்-கழுவுதல்.

கருத்துரை : சிறியவர் பெரியவர் என்பதை நாம் உருவு கண்டு மதிக்க முடியாது

மரத்திற்கு ஒப்பானவர்

13. கவையாகிக் கொம்பாகிக் காட்டகத்தே நிற்கும்
அவையல்ல நல்ல மரங்கள் — சவைநடுவே
நீட்டோலை வாசியா நின்றான் குறிப்பறிய
மாட்டா தவன்நல் மரம்.

பதவுரை : கவை ஆகி - கிளைகளையுடையனவாகியும், கொம்பாகி - கொம்புகளை யுடையனவாகியும், காட்டு அகத்து நிற்கும் - காட்டினுள்ளே நிற்கின்ற, அவை – அந்த மரங்கள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்ல மரங்கள் அல்ல - நல்ல மரங்கள் ஆகா: சவை நடுவே - கற்றோர் சவையின் மத்தியில், நீட்டு ஓலை - (ஒருவர்) நீட்டிய ஓலையை, வாசியா நின்றான் - வாசிக்க மாட்டாமல் நின்றவனும், குறிப்பு - பிறர் குறிப்பை, அறியமாட்டாதவன்-அறிந்துகொள்ள முடியாதவனும், நல் மரம் -நல்ல மரங்களாம்.

கருத்துரை : படிக்கத் தெரியாதவனும் குறிப்பறியாதவனும் மரங்களுக்குச் சமானமாவார்கள்.

கல்லாதவன் கற்றவனைப் போல் நடித்தல்

14. கான மயிலாடக் கண்டிருந்த வான்கோழி
தானு மதுவாகப் பாவித்துத் — தானுந்தன்
பொல்லாச் சிறகைவிரித் தாடினாற் போலுமே
கல்லாதான் கற்ற கவி.

பதவுரை : கல்லாதான் – (நன்கு கற்ற ஒருவர், பிழை இல்லாத கவிதை ஒன்றைச் சொல்லிப் பொருள் கூற அதனைப் பார்த்திருந்த) கல்வி அறிவற்ற ஒருவன், கற்றகவி - தான் பிழையாகக் கற்ற கவிதையைப் பிறருக்குச் சொல்லிப் பொருள் கூறுதல், கான மயிலாட - காட்டிலுள்ள மயில் (தனது அழகிய கலாபத்தை விரித்து) ஆட, கண்டு இருந்த வான் கோழி - அதைப் பார்த்துக்கொண்டிருந்த வான்கோழியானது, தானும் அது வாகப் பாவித்து - தன்னையும் அம் மயிலென மதித்துக் கொண்டு, தானும் தன் - தானும் தனது, பொல்லாச் சிறகை - அழகற்ற சிறகினை, விரித்து ஆடினால் போலும் - விரித்து ஆடுவதை ஒக்கும்.

கருத்துரை ; கல்லாதவன்,கற்றவனைப் போல் நடிப்பதால் கற்றவனாகான்.

தீயவருக்கு உதவுதல் தீங்கையே பயக்கும்

15. வேங்கை வரிப்புலிநோய் தீர்த்த விடகாரி
ஆங்கதனுக் காகாரம் ஆனாற்போல் — பாங்கறியாப்
புல்லறி வாளர்க்குச் செய்த உபகாரம்
கல்லின்மே லிட்ட கலம்.

பதவுரை : வரி வேங்கைப் புலி - வரிகளையுடைய வேங்கைப் புலியின், நோய் - விட நோயை, தீர்த்த - போக்கிய, விடகாரி - விடவைத்தியன், ஆங்கு - அப்போதே, அதனுக்கு - அப் புலிக்கு, ஆகாரம் ஆனால் போல் - இரை யானால் போல, பாங்கு அறியா - நன்றியையறியாத, புல் அறிவாளர்க்கு - அற்ப அறிவினர்க்கு, செய்த உபகாரம் - செய்யப்பட்ட உதவி, கல்லின் மேல் இட்ட கலம் - கல்லின் மேலே போட்ட மண் கலம் போல் அழிந்து துன்பத்தை விளைவிக்கும்.

கருத்துரை : தீயவர், தமக்கு உபகாரம் செய்தார்களே என்பதையும் பாராமல் அவ்வுபகாரிகளுக்கே தீங்கு செய்வர்.

அடக்க முடையார் இயல்பு

16. அடக்க முடையார் அறிவிலரென் றெண்ணிக்
கடக்கக் கருதவும் வேண்டா — மடைத்தலையில்
ஓடுமீன் ஓட உறுமீன் வருமளவும்
வாடி யிருக்குமாம் கொக்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதவுரை : கொக்கு - கொக்கானது, மடைத் தலையில் - நீர் வாய்க்காலில், ஓடு மீன் ஓட - ஓடுகின்ற சிறுமீன்கள் ஓடிக்கொண்டிருக்க, உறு மீன் - (தனக்கு) இரையாதற்குரிய) பெரியமீன், வரும் அளவும் - வருகின்ற வரையிலும், வாடியிருக்கும் – சோர்ந்திருக்கும், (அதுபோல) அடக்கம் உடையார் - அடங்கியிருப்பவரை, அறிவு இலர் - (அங்ஙனம் அடங்கியிருப்பதினாலேயே) அறிவு இல்லாதவர், என்றெண்ணி – என்று நினைத்து, கடக்க - அவ்வடக்கமுடையாரை வெல்லுவதற்கு, கருதவும் வேண்டா - நினைக்கவும் வேண்டுவதில்லை.

கருத்துரை : ஒருவர் அடக்கமாக இருப்பதைக் கண்டு அவரை அறிவில்லாதவர் என்று கருதி வென்றிட நினைத்தால் கேட்டினைப் பயக்கும்.

உண்மை உறவினர்

17. அற்ற குளத்தின் அறுநீர்ப் பறவை போல்
உற்றுழித் தீர்வார் உறவல்லர் — அக்குளத்தில்
கொட்டியும் ஆம்பலும் நெய்தலும் போலவே
ஒட்டி யுறுவார் உறவு.

பதவுரை : அற்ற குளத்தின் - நீர் வற்றிய குளத்திலிருந்து, அறு - நீங்கிச் செல்கின்ற, நீர்ப் பறவை போல் - நீரில் வாழும் பறவைகளைப் போல, உற்றுழி (வறுமை) வந்த போது, தீர்வார் - விட்டுப் பிரிகின்றவர், உறவு அல்லர் - உறவினர் ஆகார், அக்குளத்தில் - அந்தக் குளத்திலுள்ள, கொட்டியும் ஆம்பலும் நெய்தலும் போல - கொட்டிக் கிழங்கும் அல்லியும், நெய்தலும் போல, ஒட்டி உறுவார் - சேர்ந்து இன்ப துன்பங்களை அநுபவிப்பவர், உறவு – உறவினராவார்.

கருத்துரை : வறுமை வந்தபோதிலும் உடனிருந்து துன்பத்தை அனுபவிப்பவரே உண்மையில் உறவினர் எனப்படுவார்.

மேலோர் கெட்டாலும் மேலோரே

18. சீரியர் கெட்டாலும் சீரியரே சீரியர்மற்
றல்லாதார் கெட்டாலங் கென்னாகும் — சீரிய
பொன்னின் குடமுடைந்தாற் பொன்னாகு மென்னாகும்
மண்ணின் குடமுடைந்தக் கால்.

பதவுரை : சீரிய – சிறந்த, பொன்னின் குடம் - பொன்னால் செய்யப்பட்ட குடம், உடைந்தால் - உடைந்தாலும், பொன்னாகும் - பழைய பொன்னேயாகிப் பயனைத் தரும், மண்ணின் குடமுடைந்தால் - மண்ணால் செய்யப்பட்ட குடம் உடைந்தால், என்னாகும் – என்ன பயன் தரும்? (அதுபோல்) சீரியர் கெட்டாலும் - மேலோர் வறுமையால் தாழ்வடைந்தாலும், சீரியரே – மேன்மையான குணமுடையவராகவே விளங்குவர்; சீரியரல்லாதார் - கீழ் மக்கள், கெட்டால் - வறுமையால் தாழ்வுற்றால், அங்கு -அப்போது, என்னாகும் - அவர்களுடைய குணம் யாதாகும்.

மற்று, அங்கு அசை நிலைகள், உடைந்தாலும் என்பதில் உள்ள உம்மை தொக்கது

கருத்துரை : வறுமை வந்த காலத்தினும் மேன்மக்கள் தங்கள் நிலையில் இருந்து தாழமாட்டார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதியின் படியே நடக்கும்

19. ஆழ அமுக்கி முகக்கினும் ஆழ்கடலில்
நாழி முகவாது நால்நாழி — தோழி
நிதியும் கணவனும் நேர்படினும் தம்தம்
விதியின் பயனே பயன்.

பதவுரை: ஆழ்கடலில் - ஆழ்ந்த சமுத்திரத்தின் நீரை, ஆழஅமுக்கி - அழுந்தும் படியாக அமுக்கி, முகக்கினும் - மொண்டாலும், நாழி - ஒருபடியானது, நால் நாழி - நான்கு படி நீரை, முகவாது - மொள்ளாது. (அதுபோல) தோழி – தோழியே, நிதியும் கணவனும் (பெண்களுக்குச்) செல்வமும் நல்ல நாயகரும், நேர்படினும் – கிடைத்தாலும், தம்தம் – அவர் அவருடைய, விதியின் பயனே பயன் — (ஊழின் அளவாகிய பயனே அவர்களால் அநுபவிக்கப்படும்) பயனாகும்.

கருத்துரை: ஒரு பெண்ணுக்குச் செல்வமும் நல்ல கணவனும் வாய்த்த போதிலும் விதியின்படியேதான் அநுபவிக்கப்படும் பயன் பொருந்தும்.

சகோதரரும் எமனுவார்

20. உடன்பிறந்தார் சுற்றத்தார் என்றிருக்க வேண்டா
உடன்பிறந்தே கொல்லும் வியாதி — உடன் பிறவா
மாமலை யிலுள்ள மருந்தே பிணிதீர்க்கும்
அம்மருந்து போல்வாருமுண்டு.

பதவுரை: வியாதி - வியாதியானது, உடன் பிறந்தே கொல்லும் - உடம்போடு தோன்றியே அவ்வுடம்பை அழிக்கும்; (ஆகையால்) உடன் பிறந்தார் - உடன் பிறந்தவர் எல்லோரும், சுற்றத்தார் என்றிருக்க வேண்டா – உறவினர் என்று நினைக்க வேண்டா, உடன் பிறவா - உடன் பிறவாத, மா மலையிலுள்ள - பெரிய மலையிலிருக்கின்ற, மருந்தே - மருந்தே, பிணி தீர்க்கும் - நோயைப் போக்கும்; அம் மருந்து போல்வாரும் உண்டு - அம் மருந்தினைப் போல (அயலாராக இருந்தும்) உதவி செய்பவரும் சிலர் உளர்.

கருத்துரை: உடன் பிறந்தவருள் தீமையைச் செய்கின்றவர்களும் இருக்கின்றனர். அயலாருள் நன்மையைப் புரிகின்றவர்களும் உள்ளனர்.

மனைவி இல்லாத மனை பாழாகும்

21. இல்லா ளகத்திருக்க இல்லாத தொன்றில்லை
இல்லாளும் இல்லாளே யாமாயின் — இல்லாள்
வலிகிடந்த மாற்ற முரைக்குமேல் அவ்வில்
புலிகிடந்த தூறாய் விடும்.

பதவுரை: இல்லாள் அகத்திருக்க - (நற்குண நற்செய்கையுடைய) மனையாள் வீட்டில் இருக்கின், இல்லாதது ஒன்று இல்லை. (அவ் வீட்டில்) இல்லாத பொருள் ஒன்றுமே இல்லையாம், இல்லாளும் – மனைவியும், இல்லாளேயாயின் - இல்லாமல் போயினும், இல்லாள் – மனையாள் வலி கிடந்த மாற்றம் உரைக்கு மேல் - கடுமை பொருந்திய சொல்லை சொல்வாளாயினும், அவ்வில் - அவ்வீடு, புலி கிடந்த - புலி தங்கிய, தூறு ஆய் விடும் - புதருக்கு சமானமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்துரை: நற்குண நற்செய்கை யுடைய மனைவி வீட்டிலிருக்க அவ்வீடு சிறப் பினைப் பெறும். அத்தகைய மனைவியில்லாத வீடு புலி தங்கும் காடாகும்.

விதியின் வலிமை

22. எழுதியவா றேகாண் இரங்குமட நெஞ்சே
கருதிய வாருமோ கருமம் — கருதிப்போய்க்
கற்பகத்தைச் சேர்ந்தோர்க்குக் காஞ்சிரங்கா யீந்ததேன்
முற்பவத்தில் செய்த வினை.

பதவுரை: இரங்கும் - வருந்துகின்ற, மட நெஞ்சே - அறியாமையை யுடைய மனமே கருதிப் போய் - (நற்பயனைப் பெறலாமென) நினைத்துச் சென்று, கற்பகத்தைச் சேர்ந் தோர்க்கு - கற்பகத்தருவையடைந்த அவருக்கு, காஞ்சிரங்காய் - (அது) எட்டிக் காயை, ஈந்ததேல் - கொடுத்ததாயின், முற்பவத்தில் செய்த வினை - (அதற்குக் காரணம்) அவர் முற்பிறப்பில் செய்த தீவினையின் பயனேயாகும்; கருமம் - ஒருவர் செய்யும் காரியம், கருதி யவாறு ஆமோ - அவர் நினைத்தபடியே ஆகுமோ? எழுதியவாறே காண் - (பிரமன்) விதித் தபடியே ஆகும் என்று அறிவாயாக.

கருத்துரை: செய் தொழில்கள், அவரவர் விதியின் படி யன்றி நினைத்தபடி யாகா.

கற்பகத் தரு, தன்னை யடைந்தவர் நினைப்பதைத் தரவல்லது. சிறந்த பயனைப் பெற வேண்டி அதனை யடைந்தவர், விதி வசத்தால் எட்டிக் காயை நினைக்க, அத்தரு, அதனை ஈந்ததை இச்செய்யுள் குறிப்பது உணர்க.

சான்றோர் சினம்

23. கற்பிளவோ டொப்பர் கயவர் கடுஞ்சினத்துப்
பொற்பிளவோ டொப்பாரும் போல்வாரே — விற்பிடித்து
நீர்கிழிய எய்த வடுப்போல மாறுமே
சீரொழுகு சான்றோர் சினம்.

பதவுரை: கயவர் - கீழோர், கடுஞ்சினத்து - கடுங் கோபத்தால் (வேறு பட்டால்) கல் பிளவோடு ஒப்பர் - கருங் கல்லின் பிளவைப் போலத் திரும்பி கூடார்; பொன் பிளவோடு ஒப்பாரும் போல்வர் - (அப்படி வேறுபட்டபோது) பொன்னின் பிளவோடு ஒப்பாவாரும் ஒப்பாவார் (திரும்ப கூட்டக் கூடுவர்), சீர் ஒழுகு - சிறப்பு மிக்க, சான்றோர் சினம் — பெரியோ ருடைய கோபம், வில் பிடித்து — வில்லைப் பிடித்து, நீர் கிழிய - நீர் பிளவுபட, எய்த வடுப் போல — எய்த பிளவு போல, மாறும் — (அப்போதே) மறையும்.

கருத்துரை: கடையாயவர், கோபத்தால் வேறுபட்டபோது பிளவுபட்ட கருங் கல்லைப்போல் எக்காலத்தும் கூடார்: இடையாயவர் பிளவுபட்ட பொன் துண்டங்களைப் போல் ஒருவர் கூட்டி வைக்கக் கூடுவர்: தலையாயவர், நீரின் பிளவைப் போல் பிரிந்த போதேகூடுவர்.

இனம் இனத்தையே நாடும்

24. நற்றாமரைக் கயத்தில் நல்லன்னம் சேர்ந்தாற்போல்
கற்றாரைக் கற்றாரே காமுறுவர் – கற்பிலா
மூர்க்கரை மூர்க்கர் முகப்பர் முதுகாட்டில்
காக்கை உகக்கும் பிணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதவுரை : கயத்தில் – குளத்திலுள்ள; நற்றுமரை - நல்ல தாமரையை, நல் அன்னம் - நல்ல அன்னப் பறவையானது, சேர்ந்தால் போல் - சேர்ந்தால் போல, கற்றுரை - கல்வி கற்றவரை, கற்றுரே - கல்வி கற்றவரே, காமுறுவர் - விரும்புவர், காக்கை - காகங்கள், முது காட்டில் - சுடுகாட்டில், பிணம் - உள்ள பிணத்தை, உகக்கும் - விரும்பும்; (அது போல) கற்பு இலா — கல்வி யில்லாத, மூர்க்கரை - மூடரை, மூர்க்கர் - மூடரே, முகப்பர் - விரும்புவர்.

கருத்துரை : கற்றவரைக் கற்றவரே விரும்புவர்; கல்வியறிவில்லாத மூடரை மூடரே விரும்புவர்.

வஞ்சனையுடையவர் ஒழுக்கம்

25. நஞ்சுடைமை தானறிந்து நாகம் கரந்துறையும்
அஞ்சாப் புறங்கிடக்கும் நீர்ப்பாம்பு — நெஞ்சில்
கரவுடையார் தம்மைக் கரப்பர் கரவார்
கரவிலா நெஞ்சத்தவர்.

பதவுரை : நாகம் - நாகபாம்பானது, தான் நஞ்சு உடைமை — தான் விடத்தை கொண்டு இருத்தலை, அறிந்து - தெரிந்து, கரந்து உறையும் - மறைந்து வசிக்கும்: நீர் - பாம்பு - (விடத்தைக் கொள்ளாத) நீரில் வாழும் பாம்பானது, அஞ்சா புறம் கிடக்கும் அஞ்சாமல் வெளியே கிடக்கும்; (அவற்றைப் போல்) நெஞ்சில் கரவு உடையார் — மனத்தில் வஞ்சனையை உடையவர், தம்மைக் கரப்பர் – தம்மைக் மறைத்துக் கொள்வர்; கரவு இலா - வஞ்சனை யில்லாத. நெஞ்சத் தவர் – மனத்தை யுடையவர், கரவார் – தம்மை மறைத்து கொண்டு ஒழுக மாட்டார்.

கருத்துரை : வஞ்சனை யுடையோர், பிறரால் தமக்கு யாது நேருமோ என்று பயந்து தம்மைத் தாம் மறைதுக்கொண்டு ஒழுகுவர். வஞ்சனையில்லாதவர். அப்பய மின்மையால் தம்மை ஒளிக்கார்.

மன்னனைக் காட்டிலும் கற்றேர் சிறப்புடையர்

26. மன்னனும் மாசறக் கற்றேனும் சீர்தூக்கின்
மன்னனில் கற்றேன் சிறப்புடையன் — மன்னற்குத்
தன்தேச மல்லால் சிறப்பில்லை கற்றேற்குச்
சென்றவிட மெல்லாம் சிறப்பு.

பதவுரை : மன்னனும் – அரசனையும், மாசு அற – குற்றம் நீங்க, கற்றேனும் - கற்ற புலவனையும், சீர்தூக்கின் – ஆராய்ந்து பார்த்தால், மன்னனில் - அரசனைக் காட்டிலும், கற்றேன் சிறப்புடையன் - கற்ற புலவன் சிறப்புடையவனுவான்; மன்னற்கு - அரசனுக்கு, தன் தேசமல்லால - தன் நாட்டிலல்லாமல் (பிற தேசங்களில்) சிறப்பு இல்லை - சிறப்பில்லையாம்; கற்றேற்கு - புலவனுக்கு, சென்றவிடமெல்லாம் — போன தேசங்களில் எல்லாம், சிறப்பு - சிறப்பு உண்டாகும்.

கருத்துரை : மன்னவனுக்குத் தன் தேசத்தில் மாத்திரம் சிறப்பு உண்டாகும்; கற்றவருக்குச் சென்றவிடத்தி லெல்லாம் சிறப்பாகும்; ஆகையால் இருவரில் கற்றவரே சிறந்தவராக மதிக்கப்படுவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமனாகுவோர்

27. கல்லாத மாந்தர்க்குக் கற்றுணர்ந்தார் சொல்கூற்றம்
அல்லாத மாந்தர்க் கறம்கூற்றம் — மெல்லிய
வாழைக்குத் தானீன்ற காய்கூற்றம் கூற்றமே
இல்லிற் கிசைந்தொழுகாப் பெண்.

பதவுரை : மெல்லிய - மென்மையான, வாழைக்கு - வாழைமரத்துக்கு, தான் ஈன்ற காய்-தான் தள்ளிய காய்களையுடைய குலையே, கூற்றம் - எமனாகும்; (அதுபோல) கல்லாத மாந்தர்க்கு - கல்வி யறிவில்லாத மக்களுக்கு,, கற்றுணர்ந்தார் சொல் - நூல்களைக் கற்றுப் பொருளை யறிந்தவருடைய உறுதி மொழியானது கூற்றம் - எமனாகும். அல்லாத மாந்தர்க்கு- அறநெறியில் செல்லாத மக்களுக்கு, அறம் கூற்றம் – தருமமே எமனாகும், இல்லிற்கு- இல்லறத்திற்கு, இசைந்து ஒழுகா - பொருந்தி நடக்காத, பெண் - மனைவியானவள், (கணவனுக்கு) கூற்றம் - எமனாவாள்.

கருத்துரை : உண்மை நூல்களைக் கற்றறியாத மூடர்களுக்குக் கற்றறிந்தவர்கள் சொல்லும் நீதிகள் இயமனைப் போல வருத்தம் செய்யும்; தரும மார்க்கத்தில் செல்லாத மக்களுக்கு அறக் கடவுளே இயமனைப் போல வருத்தம் செய்வான்.

வறுமையால் குணம் மாறுதர்

28. சந்தன மென்குறடு தான்தேய்ந்த காலத்தும்
கந்தம் குறைபடா தாதலால் — தந்தம்
தனஞ்சிறிய ராயினும் தார்வேந்தர் கேட்டால்
மனஞ்சிறிய ராவரோ மற்று.

பதவுரை : மெல் சந்தனக் குறடு - மிருதுவாகிய சந்தனக்கட்டை, தான் தேய்ந்த காலத்தும் – தான் தேய்ந்து போன காலத்திலும், கந்தம் குறைபடாது – மணம் குறையாது. ஆதலால் ஆதலினால் – தார் வேந்தர் - மாலையை யணிந்த சிறந்த அரசர்கள், கேட்டால் – வறுமையால்; தம் தம் தனம் - தங்கள் தங்கள் செல்வத்தில், சிறியராயினும் - குறைந்தவராயினும், மனம் சிறியராவரோ - மனவலிமை குறைந்தவர் ஆவரோ? (ஆகார்)

கருத்துரை : சிறந்த அரசர்கள் வறுமையால் செல்வம் சுருங்கினாலும் மன விரிவு நீங்காதவராவார்.

இலக்குமி கூடியிருக்கும்போது ஆவன

29. மருவினிய சுற்றமும் வான்பொருளும் நல்ல
உருவு முயர்குலமு மெல்லாந் — திருமடந்தை
ஆம்போ தவளோடும் ஆகுமவள் பிரிந்து
போம்போ தவளோடும் போம்.

பதவுரை : மருவு இனிய சுற்றமும் - பொருந்திய நல்ல உறவும், வான் பொருளும் - சிறந்த செல்வமும், நல்ல உருவும் - நல்ல அழகும், உயர் குலமும் - உயர்ந்த குடிப் பிறப்பும் ஆகிய இவை, திருமடந்தை - இலக்குமி, ஆம் போது - கூடும் போது, அவளோடும் ஆகும்- அவளுடனே வந்து கூடும், அவள் பிரிந்து - அவள் நீங்கி, போம் போது - போகும் பொழுது, அவளோடும் போம் – அவளோடும் போய் விடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகும் போகும் என்பன ஆம் போம் என்று விகாரப்பட்டன.

கருத்துரை: சுற்றம், செல்வம், அழகு, உயர் குலம் முதலிய நலங்கள் யாவும் நிலையுடையன வல்ல.

அறிவுடையோர் ஒழுக்கம்

30. சாந்தனையும் தீயனவே செய்திடினும் தாமவரை
ஆந்தனையும் காப்பர் அறிவுடையோர் — மாந்தர்
குறைக்குந் தனையுங் குளிர்நிழலைத் தந்து
மறைக்குமாங் கண்டீர் மரம்.

பதவுரை: மரம் - மரங்கள், மாந்தர் - மக்கள், குறைக்கும் தனையும் - (அவற்றை) வெட்டுமளவும், குளிர் நிழலை - குளிர்ந்த நிழலை, தந்து - கொடுத்து, மறைக்கும் - வெயிலை மறைக்கும்; (அதுபோல) அறிவு உடையோர் - சிறந்த அறிவினை யுடையவர்; சாந்தனையும் - தாம் இறந்து போம் அளவும், தீயனவே செய்திடினும் - (பிறர் தமக்குத்) தீங்குகளையே செய்த போதிலும், தாம் அவரை - தாம் அவரையும், ஆம் தனையும் - தம்மாலே ஆகுமளவும், காப்பார் - பாதுகாப்பார்

ஆம் இசை, கண்டீர். முன்னிலை யசை.

கருத்துரை: உண்மை யறிவுடையவர் தமக்குத் தீங்கு செய்பவருக்கும் நன்மையே செய்வர்.

யாழ்ப்பாணம், 386, மணிக்கூட்டு வீதியில் உள்ள கு. வி. அச்சகத்தில், திரு. கு. வி. அமிர்தலிங்கத்துரை அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாங்கிப்படியுங்கள் !

1. கொன்றைவேந்தன் (மூலமும் தெளிவான உரையும்) 2-50
2. மூதுரை (மூலமும் தெளிவான உரையும்) 3-00
3. நல்வழி (மூலமும் தெளிவான உரையும்) 3-50
4. நன்னெறி (மூலமும் தெளிவான உரையும்) 4-00

வெளியீடு :

கு. வி. அச்சகம்
386, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org